வாடிப்பட்டி, கருமத்தம்பட்டி, பேரூர், தேவர்சோலா, நடுவட்டம், பொன்னம்பட்டி மற்றும் காவேரிப்பாக்கம் ஆகிய 11 பேரூராட்சிகளில் அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையங்கள் ரூ.35.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று இந்த ஆண்டு (2018-2019) நகராட்சி நிருவாகம் தொடர்பான மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்ற அன்று அறிவிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10-25

கோயம்புத்தூர், சேலம், மதுரை போன்ற மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பெருமுயற்சி செய்து மூன்று Bus Ports அமைக்க மத்திய அரசின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, விவரமாக எடுத்துச்சொல்லி, கடுமையான முயற்சிகளை எடுத்ததன் காரணமாக, Bus Port அமைக்கும் ஒரு நல்ல வாய்ப்பு சேலம் மாநகருக்குக் கிடைத்திருக்கிறது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேருந்து நிலையங்களைப் பல்வேறு இடங்களில் அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாலும்கூட, அதற்கான நிலம் கையகப்படுத்தும் சூழ்நிலைகளில்தான் பிரச்சினை இருக்கிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட இடங்களிலெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

226—

உலக வர்த்தக மையம்

***7094—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் உலக வர்த்தக மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூன் 27]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டத்தில் உலக வர்த்தக மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) வசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களுடன் முன்வந்தால், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) அவர்களுடன் இணைந்து, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் தமிழகத்தின் நுழைவாயிலாகச் செயல்படும் மதுரையைச் சுற்றி திண்டுக்கல், தேனி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையிலும் தனித்துவத்துடன் சிறப்பு வாய்ந்து திகழ்கின்றன. குறிப்பாக, மதுரையில் மல்லிகை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், இரப்பர், பிளாஸ்டிக், ஆடைகள் தயாரிப்பு நிறுவனங்கள், வாடிப்பட்டி* textile park, *காரியாப்பட்டியில் 100 சதவிகிதம் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன்கூடிய* dyeing and bleaching clusters, *உணவு உற்பத்தித் தொழில்கள், இரப்பர் மற்றும் இயந்திர* clusters *ஆகியவை* MADITSSIA *சங்க உதவியுடன் தொடங்கப்பட உள்ளன. தற்போது* medical tourism *வளர்ந்துவரும் நகரங்களோடு மதுரையும் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், கைத்தறி மற்றும் சுங்குடி சேலைகள் உலக அளவில் மதுரைக்குப் பெருமைசேர்த்து வருகின்றன. இங்கு இரயில், வான் வழி மற்றும் சாலை வசதி நல்ல முறையில் உள்ளதால் உலகமயமாக்கலின் பல்வேறு பயன்களையும் பெறும் வகையில் இங்கே உலக வர்த்தக மையம் அமைந்தால் தமிழ்நாட்டின் பொருளாதாரமும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும், வளர்ச்சியும் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், இதற்குப் பதில் இருந்தால் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பான* MADITSSIA *மதுரை, அண்ணா நகர் பகுதியில் ஒரு கருத்தரங்குக் கூடத்துடன் சிறிய அளவிலான மையத்தினை நிறுவி, செயல்பட்டு வருகிறது. தொழில் வர்த்தக மையத்தை மதுரையில் அமைக்க வேண்டும் என்பது வர்த்தகத் தொழிற்சங்கத்தின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. தற்சமயம் மதுரை, தமுக்கம் மைதானத்தில்தான் பல்வேறு கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன. மதுரை மாநகராட்சி மற்றும் மாவட்ட நிருவாகம் மதுரை நகரில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு தொழில் வர்த்தக மையத்தினை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்வது சம்பந்தமான பணிகளை மேற்கொண்டுவருவதாக அறிகின்றோம். மேலும், மதுரை மாநகராட்சியின் முன்னாள் மேயரும், தற்போதைய சட்டமன்ற உறுப்பினருமான திரு. இராஜன் செல்லப்பா அவர்களும் இது சம்பந்தமாக அரசிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்துவருகிறார். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இதுசம்பந்தமான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். வர்த்தக மையம் அமைப்பது என்பது மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்த வேண்டிய திட்டப் பணியாகும். எனவே, மதுரையில் தொழில் வர்த்தக மையம்* (Trade Centre) *அமைப்பது தொடர்பான சாத்தியக்கூறை ஆராய்ந்து, அறிக்கையைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள்தான் நன்றி சொல்லிவிட்டீர்களே! வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*